*349. வினு—திரு. என். கிட்டப்பா: முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் செய்திப்படங்களைத் தயாரிப்பதற்கென்று அரசுத் துறையில் ஒரு ஸ்டுடியோ அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசின் செய்திப் படங்களையும் விளக்கப் படங்களையும் தயாரிப்பதற்கென்று அரசுக்குச் சொந்தமான திரைப்படக் கூடமொன்று பொது (செய்தி—விளம்பரத்) துறையின் கீழ் ஏற்கனவே உள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழக அரசு ஸ்டுடியோ அமைக்க போட்டிருக்கும் முதலீட்டையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அவை களை அறிவிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினரும் அவைகளைப் பற்றி அவ்வளவு அவசரமாக அறிய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அதை விற்பதாக இல்லை.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, அரசுக்குச் சொந்தமான இந்த ஸ்டுடியோக்களில் தனிப்பட்ட பட முதலாளிகள் படம் எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்களா? அப்படி அனுமதிக்கப்பட்டால் அதற்கான ரேட் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அனுமதிக்கப்படுகிறார் கள். பல படங்கள் அதிலே எடுக்கப்பட்டு அந்த ஸ்டுடியோவின் ராசியின் காரணமாக வெற்றிகரமாக ஓடியிருக்கின்றன என்பதைப் பட முதலாளியாகிய மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குக் கூறிக் கொள்கிறேன். இப்பொழுது அங்கு பெரிய ஃப்ளோர், சிறிய ஃப்ளோர் என்று இரண்டு இருக்கின்றன. சிறிய ஃப்ளோர் மாணவர்களின் பயிற்சிக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. பெரிய ஃப்ளோர் வாடகைக்கு விடப்படுகிறது, ஒரு மணி நேரத்திற்கு மற்ற ஸ்டுடியோக்களை விட குறைந்த வாடகையாக, 50 ரூபாய் தான்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, தமிழக அரசு செய்தித்துறை நீலகிரி போன்ற எழில் கொஞ்சும் பகுதிகளைப் படமாக்கி நம் நாட்டிற்கும் வெளிநாட்டவர்களுக்கும் காட்ட ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உதகை போன்ற குளிர்ச்சி மிகுந்த, வளம் மிகுந்த இடங்களைப் படமாக்கி அதை மற்றவர்களெல்லாம் பார்க்கிறார்கள், அங்கேயிருக்கும் மாண்புமிகு உறுப்பினரைத் தவிர.

1971 டிசம்பர் 14]

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசின் சார்பாக இங்கே அமைக்கப்பட்டிருக்கும் திரைப்பட நிலையத்தைப்போன்று வேறு மாநிலங்களில் அரசின் சார்பாக திரைப்படக் கூடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு இடங்களில் மாநில அளவிலே இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் பூனவில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒரு ஸ்டூடியோ இருப்பதாக அறிகிறேன்.

கிருஷ்ணராயபுரம் உயர்நிலைப்பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம்

* 350 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் உயர்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்வி ஆண்டு 1971-72-ல் இப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே. இந்த ஆய்வுக்கூடத்திற்கு அரசாங்கம் எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்காக கட்டிடத்திற்காக 25,000 ரூபாயும், அறிவியல் கருவிகளுக்காக 15.000 ரூபாயும் ஆக 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பொன்னேரி கலைக்கல்லூரியில் பட்ட மேம்படிப்புத் துவக்கம்

* 351. வின—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி கலைக்கல்லூரியில் எம். ஏ., எம். எஸ்சி., பட்ட வகுப்புகளைத் தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொன்னேரிக் கல்லூரியில் பட்ட மேல்படிப்பு பயிற்சிக்கு வசதி செய்வதற்கான செயற்குறிப்பு இப்போது இல்லை.